DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**CC. No. 236 /2024**

**Deposition of LW3 examined as PW3** Dt. 06.05.2025

| | |
|---|---|
| Name | செல்வம் |
| Father's/Husband's Name | சிங்காரம் |
| Village | டி. மணல்மேடு |
| Taluk | |
| Age | 64/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 06.05.2025

(Accused present)

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து TNCSC ல் சுமைபணி தொழிலாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். அ.சா.2 எனது மகள். ஆஜர் எதிரி எனது மருமகன். எனது மகளை 2009ல் ஆஜர் எதிரிக்கு திருமணம் செய்து கொடுத்தேன். 2 வருட காலம் நல்ல முறையில் சென்றது. அதன் பிறகு கணவன் மனைவிக்குள் அடிக்கடி சண்டை வரும் கோபித்து கொண்டு மகள் வீட்டிற்கு வரும் போதெல்லாம் நான் சமாதானம் செய்து விட்டு ஊர்காரர்கள் சேர்ந்து பஞ்சாயத்து செய்து ஆஜர் எதிரியுடன் அனுப்பி வைப்பேன். 2023 ம் வருடம் மருமகன் தகராறு செய்ததில் தூக்கமாத்திரை சாப்பிட்டுவிட்டு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து கொண்ட பின் மகளுடன் துணையாக அனந்தநல்லூர் ஆஜர் எதிரி வீட்டில் நானும் தங்கியிருந்தேன். கடந்த 04.09.2023 ம் தேதி மாலை 7.30, 8 மணியளவில் கணவன், மனைவி இடையே தகறாறு நடந்தது. நான் ஆஜர் எதிரியிடம் ஏன் தகராறு செய்கிறாய் என்று கேட்டதற்கு கொச்சையான வார்த்தையால் திட்டி கட்டையால் அடிக்க வந்தார். நான் பயந்து கொண்டு எதிர்புறம் உள்ள வீட்டிற்கு சென்றுவிட்டேன். அதன்பிறகு நான் வெளியே வந்து பார்த்த போது எனது மகளை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். சம்பவம் கேள்விபட்டு என்னை எனது மகன் ஸ்ரீதர் வந்து அழைத்து கொண்டு மருத்துவமனைக்கு சென்றார். போலீசார் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரி முன்னிலை சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது

6/5/25

நீதித்துறை நடுவர் எண்-II
மயிலாடுதுறை.